# தந்தை பெரியார் நமக்குக் கற்றுத் தந்த சுயமரியாதையுடன் வாழ வேண்டும்!

## திண்டுக்கல் – வேடசந்தூர் வீரா.சாமிநாதன் இல்ல மண விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!



**திண்டுக்கல்,அக்.11-**

**திண்டுக்கல் மேற்கு மாவட்டம் - வேடசந்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வீரா.சாமிநாதன் அவர்களின் மகன் ஸ்ரீகாந்த் - மருத்துவர் வீரவர்ஷினி இணையரின் திருமணத்தை வேடசந்தூரில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``பெரியார் நமக்கு கற்றுத் தந்த சுயமரியாதையுடன் வாழ வேண்டும். எதற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதற்கு விட்டுக்கொடுத்து, எதற்கு விட்டுக் கொடுக்கக் கூடாதோ, அதை விட்டுக் கொடுக்காமல் இருவரும் நல்ல நண்பர்களாக வாழ வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரைவருமாறு:**

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், வேடசந்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வீரா.சாமிநாதன் அவர்களின் மகன் ஸ்ரீகாந்த், மணமகள் வீரவர்ஷினி ஆகியோரின் திருமணத்தை உங்கள் முன்னிலையில், உங்களின் வாழ்த்துகளுடன் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### வாய்ப்புக்கு நன்றி

திருச்சி மற்றும் திண்டுக்கல் இரண்டு மாவட்டங்களும் அண்ணன் வீரா.சாமிநாதன் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நேற்று முழுவதும் திருச்சி, நேற்று மாலையிலிருந்து திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். இன்று காலை இந்தத் திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு, மீண்டும் மாலை திருச்சி மாவட்ட நிகழ்ச்சி செல்கிறேன். இரண்டு நாட்களாக திருச்சியிலும், திண்டுக்கல்லிலும் மக்களையும், உடன்பிறப்புகளையும் சந்திப்பதற்கு அண்ணன் வீரா.சாமிநாதன் அவர்கள் இந்த வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் பேசும் போது, இரண்டு மாதங்களுக்கு முன்பு இந்தத் தேதி என்னிடத்தில் வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொன்னார். . அண்ணன் சக்கரபாணி அவர்கள் பேசும்போது அண்ணன் சாமிநாதன் அவர்கள் தலைவரை வைத்து, இந்தத் திருமணத்தை நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டார் என்று சொன்னார்.

### உற்சாகமும் எழுச்சியும்

தலைவரிடத்தில்தான் முதலில் தேதி கேட்க வேண்டும் என்று விருப்பப்பட்டார். தலைவருக்கு அரசுப் பணிகள், தேர்தல் பணிகள் இருப்பதால் அவரை அழைக்க முடியாது. நாம் இளைஞர் அணிச் செயலாளரை அழைப்போம் என்று என்னை இன்று அழைத்துள்ளார். நீங்கள் தலைவரை அழைத்திருந்தீர்கள் என்றால், நிச்சயம் தலைவர் வந்து மணமக்களை வாழ்த்தி இருப்பார்கள் என்று நான் சொல்கிறேன். தலைவர் வந்திருந்தாலும், நானும் தலைவருடன் வந்து மணமக்களை வாழ்த்துவதற்கு வந்திருப்பேன். நேற்று திருச்சி, திண்டுக்கல்லில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். எங்கு சென்றாலும், கழகத்தினரின் உற்சாக வரவேற்பும், எழுச்சியும் இருந்தது. இந்த அரங்கிற்கு எனது வாகனத்தில் இருந்து வரும்போதுகூட உங்களின் எழுச்சியையும், அன்பையும் பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.

இந்த இரண்டு நாட்களில் அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், என் அருமை சகோதரர் ஐ.பி. செந்தில்குமார் அவர்களுக்கும், இந்த திருமண விழாவை நம் கழக மண்டல மாநாடு போல ஏற்பாடு செய்துள்ள ஒன்றியச் செயலாளர் அண்ணன் வீரா.சாமிநாதன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நமது குடும்பத் திருமணம்

இங்கு வந்திருக்கிற ஒவ்வொருவர் முகத்திலும் தெரிகிற மகிழ்ச்சியும், எழுச்சியும் எனக்கு ஒரு தனி உற்சாகத்தை அளிக்கிறது. அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள், அண்ணன் சக்கரபாணி அவர்களிடம் சொன்னார். இரண்டு நாட்களுக்கு முன்பு தேதி வாங்கினாலும், 20 நாட்களுக்கு முன்புதான் வந்து எனக்கு பத்திரிகை வைத்தார்கள். பத்திரிகை வைக்கும்போது, பத்திரிகையுடன் சேர்த்து புது புடவை, வேட்டி சட்டை எல்லாம் வைத்தார்கள். நானும் பெருமையாக நினைத்தேன். திருமணத்திற்கு சென்று தலைமை தாங்குகிறோம். நம் குடும்பத் திருமணத்தை எப்படி நடத்துவோமோ அந்த உரிமையோடு எனக்கு வழங்கி இருக்கிறார் என்று நினைத்தேன். அதன்பிறகுதான் அண்ணன் சக்கரபாணி அவர்கள் சொன்னார் உங்களுக்கு மட்டுமல்ல, தொகுதியில் உள்ள அனைவருக்கும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேருக்கு புது வேட்டி-சட்டை, புது புடவை வைத்து அழைப்பிதழை சிறப்பாக வழங்கி இருக்கிறார் என்று சொன்னார்.

அண்ணன் வீரா.சாமிநாதன் அவர்களைப் பொறுத்தவரைக்கும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால், கலைஞரின் மிகத் தூய்மையான உடன்பிறப்புகளில் ஒருவர். 30 ஆண்டுகளாக இந்த இயக்கத்திற்காக உழைத்து வருகிறார். அண்ணன் ஐ.பெரியாசாமி அவர்களுக்கும், அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், ஐ.பி.செந்தில்குமார் அவர்களுக்கும் ஒரு பக்கப்பலமாக இருந்து இந்த வேடசந்தூர் பகுதியில், நம் கழகத்தை மிகுந்த கட்டுபாட்டுடன் கோட்டையாகப் பாதுகாத்து வருகிறார்.

அண்ணன் அவர்கள் கொரோனா காலத்தில் களத்தில் இறங்கி ஆயிரக்கணக்கான மக்களுக்கு தேவையான அரிசி, மளிகைப் பொருட்களை இலவச சேவையாக கொடுத்துள்ளார். கொரோனா இரண்டாம் அலை வேகமெடுத்த நேரத்தில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆக்ஸிஜன் சிலிண்டர்களை கொடுத்து மக்களுக்கு உதவியிருக்கிறார். தனது சொந்த செலவில் பள்ளிகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள், மருத்துவமனைகளுக்குத் தேவையான கட்டமைப்புகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தவர்தான் நம் ஒன்றியக் கழகச் செயலாளர் அண்ணன் வீரா.சாமிநாதன் அவர்கள்.

### இளைஞர்கள் இயக்கம்

கடந்த 11 ஆண்டுகளாக கிரிக்கெட், கபடி போன்ற விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து நடத்தி, இளைஞர்களை நம் இயக்கத்தின் பக்கம் ஈர்த்து வருகிறார். இந்தப் பகுதியில் மட்டும் 10 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு, மிகப்பெரிய பொது சேவையை அவர் செய்துள்ளார். மக்கள் பணி, கழகப் பணி மட்டுமல்ல கல்விப் பணியிலும் அண்ணன் வீரா.சாமிநாதன் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். விழாவுக்கு ஏராளமான தாய்மார்கள், சகோதரிகள் வந்து இருக்கிறீர்கள். எப்படி வாக்காளர் பட்டியலில் ஆண்களைவிட இன்றைக்கு பெண்கள் அதிகமாக இருக்கிறீர்களோ, அதேபோல் இந்த அரங்கிலும் ஆண்களைவிட மகளிர்தான் அதிகமாக அமர்ந்து இருக்கிறீர்கள். அதற்கு காரணம் நம் அரசு பெண்களுக்கான அரசாக சிறப்பாக நடைபெற்று கொண்டு இருக்கிறது. ஒரு சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

### மகளிருக்கான கையெழுத்து

நம் ஆட்சி அமைந்தவுடன் நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான கையெழுத்து. மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து திட்டத்தை நம் தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். அந்தத் திட்டத்தில் இந்த நான்கரை வருடத்தில், 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தால் மட்டும் சேமிக்கிறார்கள்.

அரசு பள்ளியில் படித்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்க வைக்க வேண்டும் என்று, நம் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முதலில் தரமான காலை உணவு, அதன்பிறகு தரமான கல்வியை நம் அரசு கொடுக்கிறது. ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். சில இடங்களில் இந்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வரவில்லை என்று சில குறைகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்த தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இன்னும் இரண்டு மாதங்களில் இன்னும் கூடுதலான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை நிச்சயமாக வந்தடையும்.

இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே எடுத்துக்காட்டான மாநிலமாக, எடுத்துக்காட்டான முதலமைச்சராக நம் முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்துகொண்டு இருக்கிறார். பொருளாதார வளர்ச்சியில் 11.19 சதவிகித வளர்ச்சியடைந்து இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

இவையெல்லாம் பொறுக்காமல் தான் அடிமைகளுக்கும், பாசிஸ்ட்டுகளுக்கும் வயிற்றெரிச்சல். எப்படியாவது தமிழ்நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்று வெவ்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறாக்ள். ஒன்றிய பாசிச பா.ஜ.க-விற்கு ஏற்கனவே எடப்பாடி பழனிச்சாமி என்ற அடிமை சிக்கியிருக்கிறார். . பழைய அடிமை பழனிசாமி பத்தவில்லை என்று, இன்றைக்கு புது அடிமைகளையும் பா.ஜ.க வலைவீசி தேடிக் கொண்டு இருக்கிறது. புது அடிமைகள் உங்களுக்குக் கிடைப்பார்கள். ஆனால் எத்தனை அடிமைகள் வந்தாலும் கருப்பு - சிவப்பு கரை வேட்டி கட்டியிருக்கின்ற தி.மு.க-வின் கடைசி தொண்டர் இருக்கிறவரைக்கும் நீங்கள் தமிழ்நாட்டுக்குள் கால் வைக்க முடியாது. ஒவ்வொரு தி.மு.க. தொண்டரும் அந்தப் பணிகளை செய்வார்கள். உங்களை ஓட, ஓட விரட்டுவார்கள்.

### புதிய கல்விக் கொள்கை

நிதி உரிமை, கல்வி உரிமை, மொழி உரிமை, மாநில உரிமையைப் பறிக்கிறார்கள். தொகுதி மறுவரையறையைக் கொண்டு வந்து 39 நாடாளுமன்ற தொகுதிகளை குறைத்து, 32 தொகுதியாக குறைக்க முயற்சி செய்கிறார்கள். ஒன்றிய அரசு புதிய கல்விக் கொள்கையைக் கொண்டுவருகிறது. இந்த புதிய கல்விக்கொள்கையைக் கொண்டு வந்தால் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தித் திணிப்பு வரும். சமஸ்கிருதத்தை எப்படியாவது தமிழ்நாட்டுக்குள் திணிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு புதிய கல்விக்கொள்கையைக் கொண்டு வருகிறார்கள்.

நீங்கள் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழநாட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு வரவேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தருவேன் என்று ஒன்றிய அமைச்சர் நேரடியாகச் சொன்னார். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் நீங்கள் 2,500 கோடி இல்லை, 10,000 ஆயிரம் கோடி கொடுத்தாலும் என்றைக்கும் தமிழ்நாட்டுக்குள், உங்கள் புதிய கல்விக் கொள்கையை அனுமதிக்க மாட்டேன் என்று தைரியமாக சொன்னார். இப்படிச் சொன்ன ஒரே முதலமைச்சர் நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்தான்.

சென்ற மாதம் பஞ்சாப் முதலமைச்சர் பகவான் சிங் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து நம் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைப் பார்த்துப் பாராட்டினார்கள். அடுத்த ஆண்டிலிருந்து எங்கள் மாநிலத்திலும் செயல்படுத்தப் போகிறேன் என்று நம் மாநிலத்தைப் பார்த்து சொல்லிவிட்டுச் சென்றார்.

15 நாட்களுக்கு முன்பு தெலங்கான முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டத்தைப் பார்த்துவிட்டு, கல்வியில் மாணவர்களை ஊக்குவிக்கிறீர்கள். இது மிகச்சிறந்த திட்டம் என்று பாராட்டி பேசினார்கள். அடுத்த கல்வியாண்டிலிருந்து தெலங்கானா மாநிலத்திலும் இந்த இரண்டு திட்டங்களைச் செயல்படுத்தப் போகிறேன் என்று பாராட்டிவிட்டுச் சென்றார்.மற்ற மாநிலங்களுக்கும், மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக நம் முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்.

### ஓரணியில் தமிழ்நாடு

நம் தலைவர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பை எடுக்கும்போது தமிழ்நாட்டு மக்கள் விரும்பி நம் இயக்கத்தில் சேர்ந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் 2 கோடி பேர் நம் இயக்கத்தில் உறுப்பினராக சேர்ந்து இருக்கிறார்கள். கழகத்தை எப்படியாவது வீழ்த்தி, தமிழ்நாட்டை கைப்பற்ற வேண்டும் என்று சங்கிகளும், பாசிஸ்ட்டுகளும் முயற்சி செய்துகொண்டு உள்ளார்கள். எனவே, அதையெல்லாம் தகர்த்தெறிய வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் உங்கள் கைகளில் இருக்கிறது.

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு பேருந்தை எடுத்துக் கொண்டு மக்களை சந்திக்க கிளம்பினார். பாதி பிரச்சாரத்தை முடித்துவிட்டார். எடப்பாடி அவர்களுக்கு எம்.ஜி.ஆரின் முகமே மறந்து விட்டது. ஜெயலலிதாவைத் தான் மறந்தார்கள் என்றால், இன்றைக்கு எம்.ஜி.ஆரையும் மறந்துவிட்டார்கள். சமீபத்தில், நீலகிரியில் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி. மாலையை அணிவித்துவிட்டு அவர் பேசும்போது அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து உள்ளேன் என்று பேசுகிறார். எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு இப்போது யாரைப் பார்த்தாலும் அவர்களின் முகம் அமித்ஷாவின் முகமாகத்தான் தெரிகிறது. அந்த அளவுக்கு முதலாளிகளிடம் விசுவாசத்தைக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

நம் தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்துள்ளார். வெல்வோம் இருநூறு - படைப்போம் வரலாறு என்று குறைந்தது 200 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழக அணி வெற்றி பெறும் என்று சொல்லி இருக்கிறார். அந்த 200 என்ற கணக்கில் முதல் தொகுதியாக இந்த வேடசந்தூர் நிச்சயமாக இருக்கும். அந்த வெற்றி, இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### அழகான தமிழ் பெயர்

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். மணமகன் வெளிநாடு சென்று படித்து வந்துள்ளார். மணமகள் மருத்துவர். அவர்களிடம் பேசும்போது, மணமகனிடம் மணமகள் என்ன படித்திருக்கிறார் என்று கேட்டேன். அவர் மருத்துவம் படித்திருக்கிறார் என்று சொன்னார். அவரை மேலும் மேற்படிப்பு படிக்கச் சொல்லப் போகிறேன். திருமணத்தால் அவரின் மேற்படிப்பு நின்றுவிடக்கூடாது என்று பெருமையாகச் சொன்னார்.

இது முழுவதும் சுயமரியாதைத் திருமணம் என்று பெருமையோடு சொன்னார் மணமகன். மணமக்களுக்கு அதிகம் அறிவுரை வழங்கத் தேவையில்லை. திராவிட கொள்கையின் மீது பற்று உள்ளவர்கள் என்று இந்த மேடைக்கு வந்தவுடன் சொன்னார்கள். மணமக்களுக்கு எனது பாராட்டுகள், வாழ்த்துகள்.

பெரியார் நமக்கு கற்றுத் தந்த சுயமரியாதையுடன் வாழ வேண்டும். எதற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதற்கு விட்டுக்கொடுத்து, எதற்கு விட்டுக்கொடுக்க கூடாதோ, அதை விட்டுக்கொடுக்காமல் இருவரும் நல்ல நண்பர்களாக வாழ வேண்டும். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நமக்கு கற்றுக் கொடுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இந்த மூன்றையும் நீங்கள் கடைபிடிக்க வேண்டும். இந்த இயக்கம் இந்த மாவட்டத்தில் இன்னும் அதிகமாக வளர, உங்களின் பணிகளை அதன்படி அமைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த திருமண விழாவில் மணமக்களை வாழ்த்துவதற்கு வாய்ப்பளித்த அண்ணன் வீரா. சாமிநாதன் அவர்களுக்கும், அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், அருமை சகோதரர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மணமக்களுக்கு ஒரு கோரிக்கை. உங்களுக்கு பிறக்கின்ற குழந்தைக்கு அழகான தமிழ் பெயரை சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, உங்கள் அனைவரின் சார்பாக மணமக்கள் இருவரும் வாழ்க, வாழ்க என வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சாமுண்டீஸ்வரி கோவிந்தன், பொதுக்குழு உறுப்பினர் பூபதி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



திண்டுக்கல் மேற்கு மாவட்டம் – வேடசந்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வீரா.சாமிநாதன் அவர்களின் மகன் ஸ்ரீகாந்த் – மருத்துவர் வீரவர்ஷினி இணையரின் திருமணத்தை வேடசந்தூரில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.